(8) அறிக்கை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அவை உரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்—

(1) ''சிகப்பு நாடா'' பத்திரிகை மீதான உரிமை மீறல் குறித்த வழக்கு.

(2) ''அலை ஓசை'' பத்திரிகை மீதான உரிமை மீறல் குறித்த வழக்கு.

(9) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரைக்கு கீழ்க்கண்ட நன்றி கூறும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

> ''1978 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி யுடையவர்களாவர்'' என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப் பினர் திருப்பூர் மணிமாறன் அவர்கள் முன்னுரைத்ததை நான் முழு மனதுடன் வழிமொழிகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து முன் மொழிந்த தீர்மானத்தின் மீது சில உணர்வுகளை நான் இந்த அவையில் வைக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, ஆளும் கட்சி ஆளுநர் உரைக்கு வக்காலத்து வாங்கி ஆதரித்து மொழிவதும், எதிர்க்கட்சிகள் இது சரியில்லை, குறைகள் இருக்கின்றன என்று சொல்லுவதும் ஒரு சடங்காக, சம்பிரதாயமாக காலம் காலமாகக் கடைப் பிடித்து வருகிற

---

* 220-229ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 229-241ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.